சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் அரசு முறை பயணமாக சிங்கப்பூருக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.5.2023) டி.வி.எஸ். மோட்டார்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சுதர்சன் வேணு மலர்கொத்து வழங்கி வரவேற்றார்.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் தக்கார் கருமுத்து தி.கண்ணன் அவர்கள் மறைவினையொட்டி அன்னாரது உடலுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய போது எடுத்தபடம். உடன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மாநகராட்சி ஆணையாளர் சிம்ரன்ஜித்சிங் காலோன் ஆகியோர் உடன் உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் மற்றும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறும் நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு மனுக்களை பெற்று பொதுமக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், மேயர் மகாலட்சுமி உள்ளிட்டோர் உள்ளனர்.

வரிசை கட்டி நிற்கும் பல நிறுவனங்கள் - புதிய தொழில் முதலீடுகள்!

இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடத்திற்கு வரும்!

'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் நம்பிக்கை!

சென்னை, மே 25 - தொழில் தொடங்க வரிசை கட்டி நிற்கும் பல நிறுவனங்கள், புதிய தொழில் முதலீடுகளால் இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடத் திற்கு வந்துவிடும் என 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து 23.5.2023 தேதிய 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் கடந்த 2 ஆண்டு கால ஆட்சி, 'தொழில்வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பொற்காலம்' என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில், ஒவ்வொரு மாதமும் ஏராளமான தொழில்முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளன. இந்த 2 ஆண்டு களில் தமிழ்நாட்டில் ரூ.2.95 லட்சம் கோடி அளவில் முதலீடுகள் செய்வதற்காக 226 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தி டப்பட்டுள்ளன. இவையெல்லாம் செயலுக்கு வரும்போது 4 லட்சத்து 12 ஆயிரத்து 565 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். எங்களை நீங்கள் தொழில் முதலீட்டுக்காக தேடிவரவேண்டும் என்று இல்லாமல், நாங்கள் உங்களைத்தேடி வருகிறோம் என்று கூறும் அளவுக்கு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், தொழில் அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு, தொழில்துறை கூடுதல் தலைமை செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குனராக முன்பு இருந்த பூஜா குல்கர்னி, இப்போது அந்த பதவியில் இருக்கும் விஷ்ணு ஆகியோர் பல நாடுகளுக்கு சென்றதால் புதிய தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

பலதரப்பட்ட உற்பத்தி தொழில் நிறுவனங்களை கணக்கிட்டால் ஆசியாவின் 'டெட்ராய்ட்' தமிழ்நாடு என்றே அழைக்கக்கூடிய அளவில் இருக்கிறது. அந்தஅளவில் சர்வதேச கனரக தொழில்நிறுவனங்கள், மினி தொழிற்பூங்காக்கள் முதல் ஏராளமான குறு, சிறு, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் பரவலாக தமிழ்நாட்டில் இருக்கின்றன. இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த மோட்டார் உதிரிபாகங்களில் 35 சதவீதம் தமிழ்நாட்டில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. கார் உள்பட மோட்டார் வாகன உற்பத்தியில் பல புகழ்பெற்ற சர்வதேச நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாமல் மின்னணு தொழில்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காலணி குறிப்பாக தோல் அல்லாத காலணி உற்பத்தியிலும் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் மிக அதிகமாக தமிழ்நாட்டில் தொழில்முனைவோர்களாகியிருக்கிறார்கள். அது போல பெண்கள் தொழில் தொடங்குவதற்கும், சென்னையை சுற்றிலும் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் பரவலாக தொழில் வளர்ச்சி அடைய சிறப்பு ஊக்கமும் வழங்கப்படுகிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில், தொழில் தொடங்குபவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அரசால் வழங்கப்படுகின்றன.

கடந்த மார்ச் மாதம் நடந்த அமைச்சரவை கூட்டத்தில், ரூ.40 ஆயிரம் கோடி முதலீடுகளுக்கான 6 தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் 2ந்தேதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில், தூத்துக்குடியில், மலேசியா நாட்டை சேர்ந்த பெட்ரோனாஸ் நிறுவனத்தால் ரூ.34 ஆயிரம் கோடி செலவில் அமையவிருக்கும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி தொழில் உள்பட மேலும் சில தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் பெருவாயலில் ரூ.1,891 கோடி செலவில் அமைய இருக்கும் 'மிட்சுபிஷி' நிறுவனத்துக்கு அடிக்கல் நாட்டிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஹூண்டாய் நிறுவனத்தின் மின்சார வாகன உற்பத்தி தொடங்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதுதவிர ராயல் என்பீல்டு நிறுவனம், சிஸ்கோ என பல நிறுவனங்கள் வரிசைகட்டி தமிழ்நாட்டில் தொழில் தொடங்க இருக்கின்றன. மேலும் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்குச் சென்று முதல்அமைச்சர் அங்கும் தொழில்முனைவோரை சந்தித்து தமிழ்நாட்டுக்கு அழைப்பு விடுக்கிறார். 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும், தொழில் முதலீடுகள் யாவையும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று தமிழ்நாடு அவரை வாழ்த்துகிறது. இதே வேகத்தில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி இருந்தால் இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் முதல் இடத்துக்கு தமிழ்நாடு வந்துவிடும் என்பதில் சந்தேகமேயில்லை.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு நான்கு முறை மாநகராட்சி - நகராட்சி- பேரூராட்சிகளில்

ஏரியா சபைக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மே 25 - தமிழக முதலமைச்சர் அவர்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏரியா சபைகளின் கூட்டங்களை ஆண்டுதோறும், தேசிய வாக்காளர் தினமான ஜனவரி 25-ஆம் நாள், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினமான ஏப்ரல் 14-ஆம் நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 15-ஆம் நாள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10-ஆம் நாள் ஆகிய நான்கு தினங்களில் நடத்திட வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்தில் மக்கள் பங்கேற்பினை உறுதி செய்யும் விதமாக, அவ்வமைப்புகளின் வார்டுகள் ஒவ்வொன்றையும், பகுதிகளாக (Areas) பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும், ஏரியா சபையை (Area Sabha) உருவாக்கும் வகையில், 2010ஆம் ஆண்டு அப்போதைய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களில் உரிய வகைமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், அந்த சட்ட திருத்தங்களின் கீழ்,2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபை விதிகள் வெளியிடப்பட்டன.

அரசு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்தை மேலும் செம்மைப்படுத்துவது தொடர்பாக மேற்கொண்டு வரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, ஏரியா சபைகளை அமைத்து நடை முறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி, தமிழ்நாட்டின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், முதல் முறையாக, கடந்த 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள், ஏரியா சபை கூட்டங்கள் நடத்தப்பெற்றன. இவற்றில், பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம் தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்திலும், 2023-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளிலும், மக்கள் தொகையின் அடிப்படையில், மாநகராட்சிகளில் ஒவ்வொரு வார்டையும் நான்கு முதல் பத்து பகுதிகளாகவும், நகராட்சிகளில் நான்கு பகுதிகளாகவும் மற்றும் பேரூராட்சிகளில் மூன்று பகுதிகளாகவும் (Areas) பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஏரியா சபைகளை அமைக்கவும் மற்றும் ஏரியா சபைகளின் கூட்டங்களை நடத்துவது தொடர்பாகவும் தேவையான வகைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விதிகளின் 180வது விதியின்படி, ஏரியா சபைக் கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, அதாவது, வருடத்திற்கு நான்கு முறை நடத்தப்பட வேண்டும்.

இதன்படி, முதலமைச்சர் அவர்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏரியா சபைகளின் கூட்டங்களை, ஆண்டுதோறும், தேசிய வாக்காளர் தினமான ஜனவரி 25-ஆம் நாள், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினமான ஏப்ரல்

14-ஆம் நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 15-ஆம் நாள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10-ஆம் நாள் ஆகிய நான்கு தினங்களில் நடத்திட வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி, கிராம சபை கூட்டங்கள், ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாட்களில் நடத்தப்பட்டு வருவதைப் போன்று, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், ஏரியா சபைக் கூட்டங்கள், வருடத்திற்கு நான்கு முறை நிர்ணயிக்கப்பட்டுள்ள நாட்களில் நடத்தப்படவும், இக்கூட்டங்களில் பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டு தங்கள் பகுதியின் அடிப்படை வசதி தேவைகள் குறித்து தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்ளவும், தங்கள் பகுதியின் வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்கவும், மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்தில் மக்கள் பங்கேற்பினை உறுதி செய்யவும், அடித்தட்டு ஜனநாயகத்தை வலுப்பெறச் செய்யவும் ஏதுவாகிறது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

புதுக்கோட்டைக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று வருகை!

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வரவேற்பு!

மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, மே 25 - புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி - புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சராக பொறுப்பேற்று முதன் முதலாக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு இன்று (25.5.2023 - வியாழக் கிழமை) பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தர உள்ளார்கள்.

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க் கண்டவாறு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதன் விவரம் வருமாறு: -

மதியம் 12.15 மணி திருமயம் தொகுதி சவேரியார் புரத்தில் சிறப்பான வரவேற்பு, 12.35 மணி ஊனையூர் விளக்கு, 12.40 மணி பெல், 12.45 மணி கடியாபட்டி விளக்கு, 12.55 மணி திருமயம் விளக்கு, 1.05 மணி சண்முகநாதன் பொறியியல் கல்லூரி, 1.20 மணி லேணா விளக்கு, 1.25 மணி டோல்கேட், 1.35 மணி நமணசமுத்திரம் கடைவீதி, 1.40 மணிஜெ. ஜெ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 1.50 மணி புதுக்கோட்டை நகர எல்லையில் சிறப்பான வரவேற்பு, 2.00 மணி ரோஜா இல்லம், மாலை 6.15 மணி ஆலங்குடி தொகுதி திருவரங்குளத்தில சிறப்பான வரவேற்பு, 6.30 மணி ஆலங்குடியில் திருமண வரவேற்பு, இரவு 7.30 மணி

கட்டியாவயல் புதுக்கோட்டை,

இரவு 07:45 மணி திருவேங்கை வாசல், இரவு 08.00 மணி

முத்துடையான்பட்டி,

இரவு 8.10 மணி நார்த்தாமலை,

இரவு 08.30 மணி கீரனூரில் உள்ள புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் இல்லம்,

செல்லுதல், இரவு 08:45 மணி நல்லூர், இரவு 09.00 மணி மாத்தூர் .

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

தி.மு.க. வர்த்தகர் அணி கலந்தாலோசனைக் கூட்டம்!

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 28.5.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22.5.2023

காசி முத்துமாணிக்கம்
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் வருகிற 27-05-2023 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.5.2023

டாக்டர் சுபேர்கான்
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக செங்கல்பட்டு நகர தி.மு.க. சார்பில் நகரச் செயலாளர் எஸ். நரேந்திரன் தலைமையில் நடைபெற்ற கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. அன்புச்செல்வன் உள்ளிட்டோர் உள்ளனர்.